


**NHM – DPH தமிழ்நாடு முழுவதும் அரசு துணை நிலையங்களில் 7296 பணியிடங்கள்.**
**விண்ணப்பிக்க கடைசி நாள்: 15 December 2021**

## முக்கிய குறிப்பு:

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் முன் இந்த அறிவிப்பை முழுவதும் கவனமாக படிக்கவும்.

மருத்துவம் -மக்கள் நல்வாழ்வுத் துறை மாவட்டத்தில் செயல்படும் துணை சுகாதார நிலையம் - நலவாழ்வு மையங்களில் (HWC-HSCs) உள்ள கீழ்கண்ட பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக பணிபுரிவதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட நலவாழ்வு அலுவலகத்தில் 15.12.2021 அன்று மாலை 5 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

வேலை வகை: தமிழக அரசு

விண்ணப்பிக்கும் முறை: தபால்

## பணியிட விபரங்கள்:

**1.** இடைநிலை சுகாதாரபணியாளர் **(Midlevel Healthcare Provider) -4848** பதவிகள்

**2.**பல்நோக்கு சுகாதார பணியாளர் **(**ஆண்**)** சுகாதார ஆய்வாளர் நிலை **II (Multi-Purpose Health Worker (Male) / Health inspector grade II) - 2448** பதவிகள்

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மொத்த பதவியிடங்களின் எண்ணிக்கை **- 7296**

## கல்வித்தகுதி:

**1.**இடைநிலை சுகாதாரபணியாளர் **(Midlevel Healthcare Provider)**

**i)** செவிலியர் பட்டய படிப்பு **(DGNM)** அல்லது இளங்கலை செவிலியர் பட்டம் **(B.Sc Nursing)**

**ii)** இளங்கலை செவிலியர் பட்டம் மற்றும் தமிழ்நாடு செவிலியம் மற்றும் தாதியம் குழுமத்தில் பதிவு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த பாடத்திட்டம். **(B.Sc Nursing with Integrated curriculum registered).**

**2.**பல்நோக்கு சுகாதார பணியாளர் **(**ஆண்**)** சுகாதார ஆய்வாளர் நிலை **!! (Multi-Purpose Health Worker (Male) / Health inspector grade II)**

**i)** பத்தாம் வகுப்பில் தமிழை மொழிப் பாடமாக கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**ii)** உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடம் உள்ளடக்கிய பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஆய்வாளர்/துப்புரவு ஆய்வாளர் **(Multi Purpose Health Worker (Male)/ Health**

**iii)** இரண்டு வருட பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்)/ சுகாதார **Inspector/ Sanitary Inspector Course training)** கல்வித்தகுதி (அங்கீகரிக்கப்பட்ட தனியார்/ நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் காந்திகிராம் கிராமிய நிறுவனம் உள்ளிட்ட நிகர்நிலை

பல்கலைக்கழகங்களில் இயக்குனர், பொது சுகாதாரம் மற்றும் நோய்

தடுப்பு மருந்து துறையால் காந்திகிராம் கிராமிய நிறுவனம் உள்ளிட்ட நிகர்நிலை பல்கலைக்கழகங்களில் இயக்குனர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையால் வழங்கப்பட்ட சான்றிதழ்)

## வயது வரம்பு:

மேற்குறிப்பிட்ட தகுதிகளை கொண்ட அதிகப்பட்சம் **50** வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

## சம்பள விகிதம்:

**1.** இடைநிலை சுகாதாரபணியாளர் **(Midlevel Healthcare Provider)**

தமிழக அரசின் விதிமுறைப்படி குறைந்தப்பட்சம் ரூ.**14,000** வழங்கப்படும்.

**2.**பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்) சுகாதார ஆய்வாளர் நிலை **I (Multi-Purpose Health Worker (Male) / Health inspector grade II)**

தமிழக அரசின் விதிமுறைப்படி குறைந்தப்பட்சம் ரூ.**11,000** வழங்கப்படும்.

## விண்ணப்ப கட்டணம்:

மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க கட்டணம் எதுவும் இல்லை.

## தேர்வு செய்யப்படும் முறை:

நேர்முகத்தேர்வு மூலம் தகுதியானவர் தேர்ந்தெடுக்கப்படுவர். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் தேர்வு குழு முடிவே இறுதியானது.

விண்ணப்பிக்கும் அனைவரும் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தங்களின் கல்வித்தகுதியில் பெற்றுள்ள மதிப்பெண்களின் சதவிகிதம் மற்றும் முன் பணி அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியான நபர்களின்
பெயர்கள் பட்டியலிடப்படும்.அவ்வாறு பட்டியலிடப்பட்ட தகுதியான நபர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.நேர்காணலில் விண்ணப்பதாரர்கள் பெறும் மதிப்பெண்களின்

அடிப்படையில் தகுதியின் வரிசையில் விண்ணப்பதாரர்களின் இறுதித் தேர்வு இருக்கும்.

தகுதி வாய்ந்த பட்டியலிடப்பட்ட நபர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கான அழைப்பு செய்தி அவர்களின் மெயில் ஐடி அல்லது பதிவு செய்த மொபைல் எண்ணிற்கு அனுப்பப்படும்.

## விண்ணப்பிக்கும் முறை:

தகுதியும், விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கில் சென்று விண்ணப்ப படிவங்களை டவுண்லோட் செய்து பூர்த்தி செய்து தங்களது கல்வி தகுதியின் சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் தேவையான அனைத்து சான்றிதழ்களையும் சுய ஒப்பமிட்டு **(Self Attested)** அனைத்து ஆவணங்களையும் இணைத்து விண்ணப்பங்கள் தபால்மூலமாக வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்களை அனுப்புவதற்காக அந்தந்த மாவட்டங்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப உறையின் மீது என்ன பதவிக்கு விண்ணப்பிக்கிறீர்கள் என்பதை கட்டாயம் குறிப்பிடவும். குறிப்பிட்டுள்ள கடைசி நாளுக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் சரியான மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணையும் இணைத்து அனுப்ப வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரருக்கு

மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலமாகவும் நேர்காணலுக்கான தகவல் தெரிவிக்கப்படும்.

குறிப்பு:

மேற்குறிப்பிட்ட காலியாக உள்ள பதவிகளுக்கு, அதற்கு தகுதி உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவில் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்க. நேர்காணலுக்கான தேதிகள் கடிதம் மூலம் பின்னர் அறிவிக்கப்படும். இதன் பொருட்டு எவ்வித கடிதப்போக்குவரத்தும் மேற்கொள்ளக்கூடாது.

மேலும் பல வேலை வாய்ப்பு தகவலை பெற எங்கள் வாட்ஸ்அப் குழுவுடன் இணைந்திருங்கள்👇

**https://chat.whatsapp.com/CJmzo7hvERWI2mvmkkYb5m**